ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2032/5 - 2017 අගෝස්තු මස 14 වැනි සඳුදා - 2017.08.14

*2032/5 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 1/2012* (II).

**1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

*1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின்கீழ், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்த அமரவீர (பா. உ.),
*கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2017, யூலை 26.*

ஒழுங்குவிதிகள்

1 . இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஏற்றுமதி செய்வதற்காக செயற்கை மூலக்கூறுகள் மீதான பவள இனங்களின் பண்படுத்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள், இலங்கை நீர்ப்பரப்புக்களில் காணப்படுவனவாக அறிக்கையிடப்பட்டிராத பவள இனங்களின் இறக்குமதியை அனுமதித்தல் வேண்டும்.

3. தாவர மற்றும் வன விலங்கினங்களின் அருகிவரும் இனங்களின் சர்வதேச வியாபாரம் மீதான சமவாயத்தில் (CITES) நிரற்படுத்தப்பட்டுள்ள எவையேனும் பவள இனங்களை இறக்குமதி செய்வதற்குரிய அனுமதிப்பத்திரம் ஒவ்வொன்றும், வன சீவராசிகளைப் பேணல் திணைக்களத்திடமிருந்து பெறப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏனைய இனங்கள் தொடர்பில் உரிமம் ஒன்று, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள சட்டத்தின் 39 ஆம் பிரிவின்கீழ் கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தினால் வழங்கப்படுதல் வேண்டும்.


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*4. ஏற்றுமதி செய்வதற்காக செயற்கை மூலக்கூறுகள் மீதான பவள இனங்களின் பண்படுத்தலுக்குரிய உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பமொன்று, இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்டுள்ள விதித்துரைக்கப்பட்ட படிவத்துக்கு இணங்க செய்யப்படுதல் வேண்டும்.*

*5. உயிர்வாழ் உயிரினத்தின் ஏதேனும் பகுதி அல்லது செயற்கை மூலக்கூறின் ஏதேனும் பகுதி கடலினுள் அல்லது கடலைச் சூழவுள்ள சுற்றுச்சூழலினுள் வெளியேற்றப்படுதலாகாது ; அத்துடன், மேற்கொள்ளப்படும் எல்லா பண்ணைச் செயற்பாடுகளும் கட்டிடமொன்றின் உட்புறத்தினுள் தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.*

*6. பண்படுத்தல் செயன்முறையானது சராசரி கடல் மட்டத்திலிருந்து நாட்டினுள் பத்து கிலோமீற்றர்களில் அமைந்துள்ள தொழில்முயற்சியொன்றில் தொழிற்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் கழிவுநீர் வெளியேற்றம் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :*

(i) *கடற்கரைக்கு அருகாமையில் அமைந்துள்ள தொழில்முயற்சியொன்றிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் நேரடியாக கடலுக்குள் வெளியேற்றப்படுதலாகாது என்பதுடன் இந்நீர் படிதல் தொட்டியொன்றினுள் சேகரிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்பட்ட குளோரின் செறிவை உபயோகிப்பதன் மூலம் படிவடையச் செய்தல் வேண்டும் என்பதுடன் கடற்கரை மணலினுள் ஊறவைத்தல் மூலம் வெளியேற்றப்படுதல் வேண்டும்.*

(ii) *கடற்கரைக்கு வெளிப்புறமாக அமைந்துள்ள தொழில்முயற்சியொன்றிலிருந்து பெறப்படும் கழிவுநீரின் வெளியேற்றமானது குளோரினை உபயோகிப்பதன் மூலம் படிவடையச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் மண்ணுக்குள் ஊறவைக்கப்படாது தேக்கி வைக்கப்படுதல் வேண்டும்.*

*7. கழிவுநீர் மற்றும் படிவடையச் செய்யப்பட்ட கலவைக்கூறுகள் என்பன படிதல் தொட்டி வாயிலாக வெளியேற்றப்படுதல் வேண்டும்.*

*8. பவளப் பண்ணைச் செய்கைக்காக உபயோகிக்கப்படும் செயற்கை மூலக்கூறுகள், இவ்வொழுங்குவிதிகளின் அட்டவணை* III *இல் குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், இலங்கை நீர்ப்பரப்புக்களில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் வேறு மூலக்கூறு அல்லது இயற்கை மூலக்கூறு பயன்படுத்தப்படுதலாகாது.*

*9. மூலக்கூறுகள், அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தொடர் இலக்கத்துடன் சேர்த்து அதிகாரசபையினதும் கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தினதும் இலச்சினை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*10. ஆளெவரும், அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரால் வழங்கப்பட்ட உரிமமொன்றின்கீழ் தவிர, பவள இனங்களுடன் செயற்கை மூலக்கூறுகளை இடம்பெயர்த்தலாகாது என்பதுடன் பண்படுத்துதலுமாகாது.*

*11. நான்காம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட நீரியல் பொருட்களைப் பண்படுத்தும் உரிமமொன்றுக்கான வேண்டுகோள் ஒவ்வொன்றும் இதற்கான* I *ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பொருளளவில் ஆக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் நான்காம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்படவுள்ள உரிமம் ஒவ்வொன்றும் இதற்கான* II *ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பொருளளவில் ஆக்கப்படுதல் வேண்டும்.*

*12. பவளப் பண்ணைச் செய்கைக்காக உரிமம் தேவைப்படுகின்ற எவரேனும் விண்ணப்பகாரர், அத்தகைய உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக, அதிகாரசபையினால் முன்மொழியப்பட்ட எல்லா நிறுவனங்களினதும் விதப்புரைகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய விதப்புரைகளை 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டு, 2011, திசெம்பர் 13 ஆந் திகதிய 1736/21 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் முகாமை ஒழுங்குவிதிகளுக்கிணங்க, அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் விதப்புரைகளுடன் சேர்த்து அவதானித்தல் வேண்டும்.*

*13.* பண்ணையில் வளர்க்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட பவளம் ஒவ்வொன்றும் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட, நடமாடும் விரிவான பரிசோதனைக் குழுவொன்றினால் பரிசோதிக்கப்படுதல் வேண்டும்.

*14.* பவள இனங்களின் இறக்குமதி மற்றும் பண்ணை வளர்ப்பு என்பன, (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின் ஏதேனும் மீறுகையில்லாது மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

*15.* இவ்வொழுங்குவிதிகளில் -

"செயற்கை மூலக்கூறுகள் மீதான பவள இனங்களின் பண்படுத்தல்" என்பது, கடல் பிரதேசத்திலிருந்து அப்பால் உள்ள நிலையமொன்றில் ஏதேனும் பண்படுத்தல் முறையில் தயாரிக்கப்பட்ட மூலக்கூறுகளின் மீது, இறக்குமதி செய்யப்பட்ட பவள இனங்களின் அல்லது பவளங்களின் அடுத்துவரும் உற்பத்திகளின் பண்படுத்தல் எனப் பொருள்படும்.

"அதிகாரசபை" என்பது, 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட, தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபை எனப் பொருள்படும்.

## அட்டவணை I

இலங்கைக்குள் பவள இனங்களை அல்லது செயற்கை மூலக்கூறுகளை இடம்பெயர்ப்பதற்குரிய
உரிமமொன்றுக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பகாரரின் முழுப்பெயர் :..............................................................................................

2. முகவரி .......................................................................................................................................

3. இடம்பெயர்த்தல் : ........................................................ இருந்து ...................................................... வரை

4. வாகன இல. : ..............................................................................................................................

5. இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தொடர் இலக்கம் : ..........................................................................................

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்/இதன்கண் உள்ள எவையேனும் விவரங்கள் பொய்யானவையாக அல்லது பிழையானவையாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன், உரிமம் வழங்கப்பட்டிருப்பின் அது இல்லாதாக்கப்படும் என்பதை நான் அறிவேன்.

................................................,
கையொப்பம்.

திகதி :.......................................

## அட்டவணை II

(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

இலங்கையில் பவள இனங்களை அல்லது செயற்கை மூலக்கூறுகளை இடம்பெயர்ப்பதற்குரிய உரிமத்தின் படிவம்

உரிம இல. :........................................................................................
திகதி :...............................................................................................

1. பெறப்பட்ட குறிப்பீட்டுத் திட்டங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் : ..............................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

2. கோரப்பட்ட ஏதேனும் மேலதிக தகவலின் விபரங்கள் : .....................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

3. உரிமம் அளிக்கப்பட்டால் :

   (i) உரிமத்தின் இல. :.........................................................................................................
   (ii) உரிமத்தின் திகதி : .........................................................................................................
   (iii) செல்லுபடியாகும் காலம் : ............................................................ இருந்து ............................................ வரை

4. இணைக்கப்பட்ட நிபந்தனைகள் (ஏதேனும் இருப்பின்) :

   (i) ........................................................................................................................
   ........................................................................................................................
   ........................................................................................................................

   (ii) ........................................................................................................................
   ........................................................................................................................
   ........................................................................................................................

   (iii) ........................................................................................................................
   ........................................................................................................................
   ........................................................................................................................

5. உரிமம் மறுக்கப்பட்டிருப்பின், உரிமம் அளிக்க மறுத்தமைக்கான காரணங்கள் :

........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................

.................................................,
உரிமமளிக்கும் அலுவலரின் கையொப்பம் மற்றும் பதவி.

திகதி :.......................................

**அட்டவணை III**

*தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட நியமங்கள்*

1. *நீர்வாழ் விலங்குகளுக்காக மூலக்கூறுகளைத் தயாரிக்கும்போது வெண்களிமண், ஓடு, களிமண் அல்லது இழை பயன்படுத்தப்படுதல் வேண்டும்.*

2. *உயிர்க்கற்பாறை பண்படுத்தலுக்கான மூலக்கூறானது, தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தொடர் இலக்கத்துடன், தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையின் அல்லது கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் இலச்சினை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

3. *தொடர் இலக்கங்கள், ஆறு இலக்கங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் எல்லா இலக்கங்களும் உயிர்க்கற்பாறையின் மேல் இடப்படுதல் வேண்டும்.*

4. *பயன்படுத்தப்படவுள்ள உயிர்க்கற்பாறையின் மாதிரியொன்று இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைக்கு காண்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.*

5. *அதே தொடர் இலக்கத்துடனான மூலக்கூறுகள் பண்படுத்தப்படுதலாகாது ; அத்துடன் தொடர் இலக்கத்துடனான மூலக்கூறுகள் ஏறுவரிசைப்படி வைப்புச் செய்யப்படுதல் வேண்டும். ஏதேனும் இடத்துக்காக வழங்கப்பட்ட தொடர் இலக்கமொன்று வேறு இடத்துக்காக பயன்படுத்தப்படுதலாகாது.*

*08-977/1*

---

*ச.வ.பீ. 1/2012* (II).

**1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

*1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின்கீழ், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த அமரவீர (பா. உ.),*
*கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2017, யூலை 26.*

ஒழுங்குவிதிகள்

1 . *இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உவர்நீர் கூனி இறால்களை (இறால் இனங்கள்) இனப்பெருக்குவதற்கென, இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை சேகரித்தல், வைத்திருத்தல் மற்றும் விநியோகித்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

2. *ஆளெவரும், இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை சேகரித்தல், வைத்திருத்தல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்கான நிலையமொன்றை, அத்தகைய நிலையம் கடற்றொழில் மற்றும் நீரியல் வள சட்டத்தின் 39 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றைப் பெற்றிருந்தாலன்றி, பேணிப் பாதுகாத்தலாகாது.*

3. *இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை சேகரித்தல், வைத்திருத்தல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்கான எல்லா நிலையங்களும், இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை குறுகிய காலப்பகுதி ஒன்றினுள் கடலில் இருந்து இடம்பெயர்ப்பதற்கு இயலச்செய்கின்றவாறு கடற்கரைக்கு மிக அண்மையில் தாபிக்கப்படுதல் வேண்டும்.*

*4. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை சேகரித்தல், வைத்திருத்தல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்கான எல்லா நிலையங்களும், பின்னிணைப்பு* I *இல் குறித்துரைக்கப்பட்ட, அதிகார சபையின் கூனி இறால்களை இடம்பெயர்த்தலுக்கான நியமங்களுக்கு இணங்க தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.*

*5. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்கள், நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் முகாமை உரிமத்தில், அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்ட கடல் பரப்புக்களில் இருந்து சேகரிக்கப்படுதல் வேண்டும்.*

*6. இனப்பெருக்கத்துக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட, இனப்பெருக்கம் செய்யத்தக்க பெண் மற்றும் ஆண் கூனி இறால்களின் தலைமார்புப் பகுதியின் ஆகக்குறைந்த நீளம் முறையே 55 மில்லிமீற்றரையும் 45 மில்லிமீற்றரையும்விடக் குறைவாக இருத்தலாகாது.*

*7. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை கடலில் இருந்து பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றைத் தேர்ந்தெடுத்தல் ஆகிய நேரங்களில், இனப்பெருக்கம் செய்யத்தக்க ஒவ்வொரு கூனி இறாலுக்குமென தனியான கையுறைகள், வலைகள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.*

*8. ஆளெவரும் இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை, அத்தகைய வைத்திருக்கும் வசதியில் அத்தகைய இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை வைத்திருக்கும் நேரத்தில், நேரடியாக சூரியக் கதிர்கள் படுமாறு வெளிப்படுத்தி வைத்தலாகாது.*

*9. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களைச் சேகரிப்பதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வொரு நிலையமும், இனப்பெருக்கத்துக்கான கையிருப்பை குஞ்சு பொரிப்பகத்துக்கு விநியோகிக்கும் நேரம் வரை களஞ்சியப்படுத்துவதற்கென, போதியளவு தனியான சாடிகள், தனியான நீர் இணைப்புக்கள் மற்றும் வளி இணைப்புக்கள் என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*10. சேகரிப்பு நிலையங்களில் காணப்படும் இனப்பெருக்கத்துக்கான கையிருப்பினுடைய உணர்கொம்புகள், கண் தண்டுகள், முகப்பு அலகுகள், நீந்துங்கால்கள் மற்றும் நடக்கும் கால்கள் தெளிவற்றவையாகவோ அல்லது செந்நிறமானவையாகவோ இருத்தல் ஆகாது.*

*11. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களைச் சேகரிப்பதற்கான நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆள், அத்தகைய நிலையத்தில் எவையேனும் இறந்துபோன அல்லது வெண்புள்ளி நோயினால் பாதிக்கப்பட்ட இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை வைத்திருத்தல் ஆகாது.*

*12. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களைச் சேகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் தொட்டிகள், சாடிகள், கை வலைகள் மற்றும் வேறு உபகரணங்கள் என்பன குளோரின் பயன்படுத்தப்பட்டு தொற்றுநீக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவை மதிய நேரத்தில் உலர்த்தப்படுதலும் வேண்டும்.*

*13. ஆளெவரும், இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களைச் சேகரிப்பதற்கான நிலையத்தில் இருபத்துநான்கு மணித்தியாலங்களைவிட அதிகமாக கூனி இறால்களை வைத்திருத்தலாகாது ; அத்துடன் தூய்மையான சிப்பிமீன் வகைகளை உணவாக அளித்தல் வேண்டும். ஆளெவரும் மெல்லோட்டுடலிகளை எந்த நேரத்திலும் உணவாக பயன்படுத்துதல் ஆகாது.*

*14. ஆளெவரும், எவையேனும் இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை அகற்றுகின்ற நேரத்தில் அவற்றை கடலுக்குள் கொட்டுதலாகாது என்பதுடன் அத்தகைய விஞ்சியளவிலான கூனி இறால்கள் அழித்தொழிக்கப்படுதல் வேண்டும். எவையேனும் விஞ்சியளவிலான, இனப்பொருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை அத்தகைய இறால்களைச் சேகரிக்கின்ற நிலையத்தில் களஞ்சியப்படுத்துதல் ஆகாது.*

*15. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்கள் சேகரிக்கப்படும் இடப்பரப்பு, அத்தகைய கூனி இறால்கள் சேகரிக்கப்படும் திகதி, சேகரிப்பாளரின் பெயர் மற்றும் முகவரி, சேகரிக்கப்பட்ட இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களின் எண்ணிக்கை, குஞ்சு பொரிப்பகத்துக்கு இடம்பெயர்க்கப்பட்ட திகதி மற்றும் இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை வழங்குகின்ற குஞ்சு பொரிப்பகம் போன்ற விடயங்கள் மீதான பதிவேடுகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

16. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை இடம்பெயர்ப்பதற்குப் பொறுப்பாகவுள்ள எவரேனுமாள், இடம்பெயர்த்தலுக்காக அத்தகைய கூனி இறால்களைத் தயார்படுத்துகின்ற நேரத்தில், அத்தகைய கூனி இறால்களை சேதப்படுத்துதலோ அல்லது அழுத்துதலோ ஆகாது. ஆளெவரும், இடம்பெயர்ப்பதற்கு முன்னர் இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள் எவையேனும் இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களுக்கு உணவளித்தல் ஆகாது.

17. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களைச் சேகரிப்பதற்கான நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள எவரேனுமாள், அத்தகைய கூனி இறால்களை தனியானதொரு கொள்கலனில் களஞ்சியப்படுத்தல் வேண்டும். கொள்கலன்கள், இதன் பின்னிணைப்பு 1 இல் குறித்துரைக்கப்பட்டவாறாக, அதிகாரசபையினால் விதந்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு இணங்க இருத்தல் வேண்டும்.

18. கொள்களன்களில் உள்ள நீரானது, வெப்பநிலை மட்டம் ($20\text{-}25^{0}$C), அமோனியா செறிவு (< 0.1 ppm இல்) மற்றும் ஒட்சிசன் செறிவு ( >4PPt இல்) போன்ற, உகந்த மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

19. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை குஞ்சு பொரிப்பகத்தின் உரிமையாளருக்கு வழங்கும்போது, அத்தகைய கூனி இறால்களைப் பிடிக்க வேண்டிய பகுதி, வழங்குநரின் விபரங்கள் மற்றும் திகதி என்பன, இதன் பின்னிணைப்பு 2 இல் குறித்துரைக்கப்பட்டவாறாக அதிகாரசபையினால் வழங்கப்பட்ட மாதிரிக்கு இணங்க, குஞ்சு பொரிப்பகத்தின் உரிமையாளருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

20. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களைச் சேகரிப்பதற்கான நிலையமொன்றின் எவரேனும் உரிமையாளர், அதிகாரசபையினால் அறிமுகப்படுத்தப்படும் மிகச்சிறந்த முகாமைத்துவ செயல்முறைகளைப் பின்பற்றியொழுகுதல் வேண்டும்.

21. பணிப்பாளர் தலைமையதிபதி, பணிப்பாளர் தலைமையதிபதியால் அது சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகர் ஒருவர் அல்லது எவரேனும் அலுவலர், அத்தகைய தொழில்முயற்சியானது இவ்வொழுங்குவிதிகளின் கீழ் விதிக்கப்பட்டதும் சுமத்தப்பட்டதுமான எல்லாத் தேவைப்பாடுகளுடனும் இணங்கியொழுகி இருக்கின்றது என்பதை சரிபார்ப்பதற்கும், மாதிரிகளைப் பெறுவதற்கும், அத்துடன் அறிக்கைகளையும் ஆவணங்களையும் பெற்றுக்கொள்வதற்கும் என, இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களைச் சேகரிப்பதற்கான எந்தவொரு நிலையத்திற்கும் சென்று பார்ப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

22. இவ்வொழுங்குவிதிகளில் -

"அதிகாரசபை" என்பது, 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தன் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபை எனப் பொருள்படும்.

"இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களைச் சேகரிப்பதற்கான நிலையம்" என்பது, இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை கடலில் இருந்து, இனப்பெருக்கம் செய்யும் நிலையங்களுக்கு வழங்கும் வரை, அத்தகைய கூனி இறால்களை இனப்பெருக்கம் செய்வதற்கென சிறந்த சுகாதார வாழ்க்கை நிலையில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் நிலையங்கள் எனப் பொருள்படும்.

பின்னிணைப்பு 1 : இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை இடம்பெயர்ப்பதற்கான நியமங்கள்

இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால் ஒன்றை இடம்பெயர்ப்பதற்காக 30 சென்றிமீற்றர் உயரம் மற்றும் 10 சென்றிமீற்றர் அகலம் கொண்ட பொலித்தீன் பை கொள்கலன் ஒன்று பயன்படுத்தப்படுதல் வேண்டும். இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை இடம்பெயர்க்கும் போது, பையினுள் 4PPm ஒட்சிசன் செறிவொன்றைக் கொண்டிருக்கும் நீர் இருத்தல் வேண்டும். கூனி இறாலின் முகப்பு அலகு மற்றும் அகட்டுக் கடைக்கண்டம் என்பன வால்வு குழாய் ஒன்றினால் மறைத்து மூடப்படுதல் வேண்டும்.

பின்னிணைப்பு 2 : இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை குஞ்சு பொரிப்பகங்களுக்கு வழங்குவதற்குரிய மாதிரிப் பற்றுச்சீட்டு

**இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களை குஞ்சு பொரிப்பகங்களுக்கு வழங்குவதற்குரிய பற்றுச்சீட்டு**

1. இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்கள் கொள்முதல் செய்யப்பட்ட இடம் :

| |
|---|
| |

(ஓர் இடத்துக்கு ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படுதல் வேண்டும்.)

2. வழங்குனரின் பெயர் :

முகவரி :......................................................................................................................
உரிம இல. :......................................................................................................................

3. வழங்கப்பட்ட இனப்பெருக்கம் செய்யத்தக்க கூனி இறால்களின் விபரங்கள் :

தொடர் இல. :......................................................................................................................
கொள்முதல் செய்யப்பட்ட திகதியும் நேரமும் :......................................................................................................................

| துண்டுகளின் எண்ணிக்கை | ஆண் | பெண் | முட்டைகளுடன் பெண் |
|---|---|---|---|
| | | | |

4. வழங்கப்பட்ட குஞ்சு பொரிப்பகத்தின் பெயர் :......................................................................................................................

5. வழங்கப்பட்ட திகதி :..........................................................

வழங்கியவர் :

பெயர் :..........................................................

கையொப்பம் :..............................................

பெற்றுக்கொண்டவர் :

பெயர் :..........................................................

கையொப்பம் :..............................................

8-977/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.